# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110202

1. District : Chennai PS: chennai city-III Year: 2020 FIR No.: 1/AC/2020/cc-III Date: 11.08.202
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention corruption Act 1988 (Amended 2018) Sections பிரிவுகள்: 7 of PC Act (Amended 2018)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை On 08.08.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை at about 14.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.08.2020 Time நேரம் : 18.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.08.2020 Time நேரம் : 18.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் No.2, AIR nagar, Ennavur, chennai-57 North 33KM
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. T. SURESH (b) Father's/ Husband's Name : Tr. Thanikachal
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1981 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி No.14/7, Cherian Nagar, 1st street, new washermenpe chennai-81

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
① Tr. prabhu, Assosser, zone-I, chennai corparation Thiruvottriyur.
② Tr. Nalla Thambi, tax collector, zone-I, chennai corporation, Thiruvottiyu

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
delayed by the complainant

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed D. Sivagami Rank Inspr of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, CC-III, Chennai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 11/08/2020
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.08.2020

Name: பெயர் D. Sivagami
Rank: நிலை Inspector of Police No. எண் .......

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016

**...continuation to column No.12 of FIR in Crime No.1/AC/2020/CC-III**

பணிந்தனுப்பப்படுகிறது. இன்று 11.08.2019-ந்தேதி மாலை 18.00 மணிக்கு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3ன் காவல் ஆய்வாளர் D.சிவகாமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது புகார்தாரர் திரு. T. சுரேஷ் என்பவர் தன் கைப்பட எழுதிக் கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு:- விடுநர், த.சுரேஷ், ஆ/வ-39, த/பெ. தணிக்காசலம், எண். 14/7, செரியன் நகர் 1வது தெரு, புது வண்ணாரப்பேட்டை, சென்னை - 81. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், சென்னை நகரபிரிவு 3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. அம்மா, எங்கள் குடும்பத்துக்கு சொந்தமான வீடு, எண் 2, ஆல் இந்தியா ரேடியோ நகர், எர்ணாவூர், சென்னை-57 என்ற முகவரியில் உள்ளது. நான் அந்த இடத்தில் M/s.மிர்த்திக்காஸ்ரீ எண்டர்பிரைசஸ் என்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனத்தை கடந்த 5 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். என் அம்மா திருமதி ரமணி தணிகாசலம் என்பவர் மேற்கண்ட முகவரியில் உள்ள (எண் 2, ஆல் இந்தியா ரேடியோ நகர், எர்ணாவூர், சென்னை -57) வீட்டினை என் மகள்களின் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரமாக கடந்த 25.01.2019ஆம் தேதி திருவொற்றியூர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்தார். எனது இரண்டு மகள்களும் மைனராக இருப்பதால் என்னை அதற்கு கார்டியனாக நியமித்தார். நான் மேற்படி வீட்டின் தரைதளத்தில் சூப்பர் மார்க்கெட் நடத்திவந்தேன். மேற்படி கடையில் நஷ்டம் ஏற்பட்டதால் அதை மூடிவிட்டு அந்த இடத்தை 2 போர்ஷனாக மாற்றி வாடகைக்கு (குடியிருப்பு) விட முடிவு செய்தேன். எனவே மேற்படி இடத்தின் சொத்துவரி கமர்ஷியல் டேரிப் ஆக இருந்ததால் அதனை வீட்டு உபயோக டேரிப் ஆக மாற்றுவதற்கு முடிவெடுத்தேன். எனவே திருவொற்றியூரிலுள்ள மாநகராட்சி அலுவலகத்திற்கு 29.07.2020 அன்று காலை சுமார் 11 மணியளவில் சென்றேன். அங்கு இருந்த ஒரு நபரிடம் விசாரித்தபோது அவர் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க அந்த அலுவலகத்தில் ஒட்டப்பட்டிருந்த மதிப்பீட்டாளர் திரு பிரபு என்பவரை அவரது கைபேசி 98404 76838 ல் தொடர்பு கொள்ள சொன்னார். நானும் தொடர்புகொண்டு பேசினேன். அப்போது என்னுடைய தேவையைப்பற்றி அவரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் அன்று மாலை 4 மணிக்கு மேல் அதே அலுவலகத்தில் தன்னை வந்து பார்க்குமாறு கூறினார். அவர் கூறியவாறு நானும் மேற்படி அலுவலகத்திற்கு சென்றேன். அங்கிருந்த Tax Assessor ஆன திரு பிரபு தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக்கொண்டார். நானும் அவரிடம் டேக்ஸ் டேரிப் மாற்றுவதற்காக என்னிடம் இருந்த ஆவணங்கள் மற்றும் ஏற்கனவே இந்த வீடானது எனது தாயார் திருமதி ரமணி தணிக்காசலம் என்பவரது பெயரில் இருந்ததால்

அதை என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கான ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். பிறகு திரு பிரபு அவர்கள் என்னுடைய கைபேசி எண்ணை பெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்புமாறு கூறினார். அதற்பிறகு கடந்த 04.08.2020-ம்தேதி காலை சுமார் 11 மணியளவில் என்னை மொபைலில் தொடர்பு கொண்டு என் வீடான எண் 2, ஆல் இந்தியா ரேடியோ நகர், எர்ணாவூர், சென்னை-57 என்ற முகவரிக்கு அவரும் அவருடன் மற்றொருவரும் வந்தார்கள். அவருடன் வந்தவர் பெயர் நல்லதம்பி அவர் Tax Collector என்றும் பிரபு அவரை எனக்கு அறிமுகம் செய்தார். பிறகு அவர்களிருவரும் சேர்ந்து என்னுடைய வீட்டின் நீள அகலங்களை அளவீடு செய்து நல்லதம்பி சொல்ல பிரபு குறித்துக் கொண்டார். அதன்பிறகு என்னிடம் உங்களுக்கு தேவையான டேரிப்பை மாற்றிக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவரை 2 நாட்கள் கழித்து மொபைல் போனில் அழைக்க வேண்டும் என்று சொல்லி சென்றுவிட்டார். அதன்பேரில் நான் கடந்த 08.08.2020-ந்தேதி மதியம் சுமார் 2 மணியளவில் பிரபுவின் கைபேசியான 98404 76838ல் தொடர்பு கொண்டு என்னுடைய டேக்ஸ் மாற்றம் மற்றும் பெயர் மாற்றம் பற்றி கேட்டேன். அப்போது அவர் என்னை வீட்டிலேயே இருக்கச் சொல்லி வருவதாக கூறினார். நானும் என்னுடைய வீடான எர்ணாவூரில் இருந்தேன். மதியம் சுமார் 02.30 மணிக்கு என் வீட்டிற்கு வந்தார் அவருடன் டேக்ஸ் கலெக்டர் திரு நலலதம்பியும் இருந்தார். நான் வந்தவரிடம் டேரிப் மாற்றம் மற்றும் பெயர் மாற்றம் செய்வது பற்றி கேட்டேன். அப்போது பிரபு என்னிடம் மேற்சொன்ன டேரிப் மாற்றம் மற்றும் பெயர் மாற்றத்திற்கு ரூ.30,000/- கொடுக்க வேண்டும் என்றும், உனக்காக ரூ.5,000/- குறைத்து ரூ.25,000/-க்கு செய்து தருகிறேன் என்று சொன்னார். அங்கிருந்த நல்லதம்பி யோவ் உனக்கு டேக்ஸ் குறையுது இல்லையா அதற்காகத்தான் நீ இந்த பணம் எங்களுக்கு குடுக்கிற மேலும் முன்பணமாக ரூ.10,000/-த்தை கொடுத்தால்தான் மேற்கொண்டு பிராசஸ் செய்வோம் என்று பிரபு என்னிடம் சொன்னார். நல்லதம்பியும் சீக்கிரம் பணத்தை ரெடி பண்ணயா என்று சொன்னார். மேலும் ரூ.10,000/-த்தை ரெடி செய்துவிட்டு தன்னை மொபைலில் காண்டெக்ட் பண்ண வேண்டும் என்றும் அந்த பணத்தை எங்கு வந்து பெற்றுக் கொள்கிறேன் என்ற விவரத்தை பிறகு சொல்கிறேன் என்று பிரபு என்னிடம் கூறி அவர்களிருவரும் தாங்கள் வந்த மோட்டார் சைக்கிளில் திரும்பி சென்றுவிட்டார்கள். அவர்களிருவரும் ரூ.25,000/-த்தை லஞ்சமாகத்தான் கேட்கிறார்கள் என்பதை புரிந்து கொண்டேன். என்னுடைய கட்டிடம் கமர்ஷியல் டேக்ஸ் டேரிப்பாக இருப்பதை மாற்றி குடியிருப்பு டேரிப்பாக மாற்றுவதற்கும், என் பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கும் Tax Assessor திரு பிரபு மற்றும் Tax Collector திரு நல்லதம்பி இருவருக்கும் ரூ.25,000/-த்தை லஞ்சமாக தர விருப்பமில்லை. அதன்பிறகு நான் என் சொந்த வேலை காரணமாக மீஞ்சூருக்கு சென்றுவிட்டதால் உடனே புகார்

கொடுக்க முடியவில்லை. ஆகவே இன்று 11.08.2020 தங்கள் முன் நேரில் ஆஜராகி அவர்களிருவர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க தங்களிடம் புகார் அளிக்கிறேன். நீங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு நான் ஒத்துழைப்பு தருகிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள Sd/xxxxx (T.Suresh) 11.08.2020.

Received the complaint on 11.08.2020 at 18.00 hrs and registered. After verifying the genuineness of the complaint and complainant and reputation of the accused I registered a case in V&AC, City-III detachment in Cr.No.1/2020/AC/CC-III u/s 7 of PC (Amendment) Act 2018 at 20.00 hrs. Sd/-xxxxx D.Sivagami, Inspr/V&AC/CC-III, 11.08.2020.

11/08/2020

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016